විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය | தலைமுறையொன்றின் பெருமிதம் | Pride of a Generation

මගේ අංකය / எனது இல. / My No. ....கடித இல: 07/2022 ஓய்வூதியச் அறிவுறுத்தல்
ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................
දිනය / திகதி / Date 2022.12.08

அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்கள்

**ஓய்வூதியர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழ் - 2023**

ஓய்வூதியர்களான இலங்கை பிரஜைகளின் ஓய்வூதியத்தினை தொடர்ச்சியாக வழங்குவதற்கான வருடாந்தம் உயிர்வாழ்ச் சான்றிதழ் பெறுதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழ்ச் சான்றிதழ் பெறப்படப்படவேண்டிய நிலமையில் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நிலமைகளைக் கருத்தில்கொண்டு செலவினைக் குறைக்கும் நோக்குடன் ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் தனித் தனி படிவங்கள் வழங்கப்படுவதற்கு பதிலாக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் ஒரு தனிப்படிவத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இம் முறைமையினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இணைப்பு 01)

02. அதன் பிரகாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் அறிமுகப்படுத்தப்படுவதுடன் பிரதேச செயலக மட்டத்தில் உள்ள தரவுகளின் அடிப்படையில் 01 – 04 வரையான நிரல்கள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் வெவ்வேறாக பூரணப்படுத்தப்பட்டு உரிய கிராம அலுவலர்களிடம் வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப் படிவத்தில் பூரணப்படுத்தப்பட வேண்டிய தரவுகள் தகவல் தொழிநுட்ப முறைமையினூடாக பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் 2022.12.12 ஆந் திகதிக்கு முன்னர் தங்களுக்கு வழங்கப்படும். ஓய்வூதியருக்கு தாம் வசிக்கும் கிராம சேவகர் பிரிவிற்குரிய கிராம சேவகர் அலுவலகத்திற்கு சென்று தமது அடையாளட்டையினை சமர்ப்பித்து ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திய பின்னர் அப்படித்தில் உரிய இடத்தில் ஓய்வூதியர் கையொப்பம் இடுவதற்கு / கையொப்பமிட முடியாவிடின் மாத்திரம் விரலடையாளத்தினை இடுவதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழை பூரணப்படுத்தப்பட வேண்டும்.

03. இணைப்பு 01 இல் உள்ள படிவத்தில் வேறு விடயங்கள் நிரலின் கீழ்

I. கையொப்பத்திற்கு பதிலாக விரலடையாளம் இடப்பட்டிருப்பின் அதற்கான காரணம்
II. விதவை / தபுதாரர் மறுமணம் செய்திருப்பின் அது தொடர்பாக
III. அநாதைப்பிள்ளை தொழில் ஒன்றில் ஈடுபடின் அது தொடர்பாக
IV. ஓய்வூதியர் தமது வசிப்பிடத்தில் இருந்து வெளியேறி இருப்பின் தற்போது வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு

V. ஓய்வூதியருக்காக பாதுகாலவர் நியமிக்கப்பட்டிருப்பின் பாதுகாலவரின் பெயர் மற்றும் அடையாளட்டை இலக்கம்

VI. ஓய்வூதியர் வெளிநாடு சென்றிருப்பின் அது தொடர்பாக

VII. தங்களால் அவதானிக்கப்பட்ட ஏதேனும் விசேடமான காரணங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

04. விரலடையாளம் மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழை உறுதிப்படுத்துவதற்காக வசதிகள் 26 பிரதேச செயலகங்கள் மற்றும் 06 அரச மற்றும் தனியார் வங்கிகளின் 476 கிளைகள் ஊடாக செயல்படுத்தப்படுகின்றது. இவ் விரலடையாளத்தின் மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழை உறுதிப்படுத்தும் வசதியினை பயன்படுத்தமுடியுமான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும். அவ் ஓய்வூதியர்களின் விபரங்கள் இணைப்பு 01 இல் உள்ள படிவத்தில் உள்ளடக்கப்படமாட்டாது.

05. உயிர்வாழ் சான்றிதழ் பெறப்படும்போது மதகுருமார்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் HAF-2/15CORDI/1507-(SUB 1) ஆம் இலக்க 2019.11.06 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புத்த துறவி / பெண் புத்த துறவி வசிக்கும் விகாரை/மடம்/வனாந்தரத்திற்கு சென்று உயிர்வாழ்ச் சான்றிதழைப்பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

06. ஊனமுற்று அல்லது முதுமைகாரணமாக நடமாட முடியாமல் வீட்டில் தங்கியுள்ள / முதியோர் இல்லத்தில் வசிக்கும் ஓய்வூதியர்கள் மற்றும் அநாதைப் பிள்ளைகளின் உயிர்வாழ்ச் சான்றிதழ் அவர்கள் வசிப்பிடங்களுக்கு சென்று பரிசீலனை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஓய்வூதியருக்காக பாதுகாவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பினும் இணைப்பு 01 இல் உள்ள படிவத்தில் ஓய்வூதியரின் கையொப்பம் / கையொப்பமிட முடியாவிடின் மாத்திரம் விரலடையாளம் இடப்பட வேண்டும்.

07. உயிர்வாழ்ச் சான்றிதழ் தரவுத் தளமானது 2023.03.31 ஆந் திகதிக்கு முன்னர் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளமையால் அதனை எவ்வித தடங்கலுமின்றி நிறைவேற்றிக்கொள்ள பின்வரும் அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

I. கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 15 இற்கு குறைவாக இருப்பின் பூரணப்படுத்தப்பட்ட படிவமானது 2023.01.01 ஆந் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரால் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட வேண்டும்.

II. கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 15 இற்கு அதிகமாக இருப்பின் பூரணப்படுத்தப்பட்ட படிவமானது 2023.02.15 ஆந் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரால் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட வேண்டும். இத் தகவல்களை அடிப்படையாக கொண்டு தரவுத்தளத்தினை புதுப்பித்த பின்னர் கையொப்பம் இடாத ஓய்வூதியர்களின் பட்டியலினை 2023.02.20 ஆந் திகதிக்கு முன்னர் மீண்டும் உரிய கிராம அலுவலரிடம் கொடுக்க வேண்டும். கிராம அலுவலரால் அப்பட்டியல் பூரணப்படுத்தப்பட்டு 2023.03.31 ஆந் திகதி பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் இப் பணியினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

III. மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிராம அலுவலரின் முன்பாக கையொம்பமிடத் தவறிய ஓய்வூதியரின் விபரங்கள் அடங்கிய நிரையானது மீண்டும் கையொப்பமிட முடியாதவாறு வெட்டப்பட வேண்டும்.

08. உயிர்வாழ்ச் சான்றிதழை 2023.03.31 ஆந் திகதிக்கு முன்னர் புதுப்பிக்க தவறும் ஓய்வூதியரின் ஓய்வூதியமானது நிறுத்தப்படுமென ஓய்வூதியருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

09. விரலடையாளம் மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழை புதுப்பித்துக் கொள்ள பதிவு செய்யப்பட்டுள்ளதா என ஓய்வூதியர் பின்வருமாறு அறிந்து கொள்ள முடியும்.
www.pensions.gov.lk → Public Services → Digital Life Certificate Information

10. விரலடையாளர் மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழை உறுதிப்படுத்தக்கூடிய 476 வங்கிக் கிளைகள் மற்றும் 26 பிரதேச செயலகங்களின் பட்டியலினை பின்வருமாறு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.
www.pensions.gov.lk → Resources → Downloads → Life Certificate -2023 through Finger Prints from 01.01.2023

11. விரலடையாளர் மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழை உறுதிப்படுத்தக்கூடிய 26 பிரதேச செயலகங்களிலும் பணிபுரியும் ஓய்வூதிய விடய அலுவலர்களினால் உயிர்வாழ்ச்சான்றிதழை உறுதிப்படுத்துவதற்கு வருகை தரும் ஓய்வூதியர்களிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

12. ஓய்வூதியர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழ் – 2023 கிராம அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள் எனும் தலைப்பில் HA/3/3/10-2 ஆம் இலக்க 2022.12.08 ஆந் திகதிய பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மூலம் அறிவுறுத்தல் தொகுப்பொன்று வெளியிடப்பட்டுள்ளமையினையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

13. நாட்டின் தற்போதைய நிலைமையினை கருத்தில் கொண்டு, செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கத்திற்கான இம் முறைமையினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கான தங்கள் ஆதரவினை மெச்சுகின்றேன்.

**ஓப்பம்./ஏ.ஜகத் டீ.டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதி:

01 செயலாளர், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - த.த.த

02. தலைவர், அரச சேவை ஓய்வூதிர்களின் அறக்கட்டளை -ஓய்வூதியர்களின் சங்கங்கள் மூலம் ஓய்வூதியர்களுக்கு அறிவிப்பதற்காகத.த.த

Annex 01

**Form Issued with Pension Instruction Letter No. 07/2022**
**Pensioners' Life Certificate – 2023**

| District | | Divisional Secretariat | | Grama Niladhari Division/No | |
|---|---|---|---|---|---|

| 01. Name of the Pensioner | 02. Pension Number (Type/Number) | 03. NIC Number | 04. Contact Number | 05. Signature | 06. Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| 7. | | | | | |
| 8. | | | | | |
| 9. | | | | | |
| 10. | | | | | |
| 11. | | | | | |
| 12. | | | | | |
| 13. | | | | | |
| 14. | | | | | |
| 15. | | | | | |

I certify that the signatures of the above pensioners are affixed in my presence.

..................... ......................................

Date Signature of Grama Niladahri and Official Stamp